**தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபை புதிய திருத்தப்பட்ட சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக நிதிக்கூற்றுக்கள் தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் பாதகமான அபிப்பிராயம் வெளிப்படுத்தப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நிய-ாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய நூலகம் மற்றும் ஆவணமாக்கல் சபையில் தேசிய புத்தக இருப்பொன்றை ஏற்படுத்துதல், பாதுகாத்தல் மற்றும் நிருவகித்தல் ஒரு பிரதான பணியாகும். அதன் பிரகாரம் சட்ட ரீதியான வைப்புக்கள், நன்கொடைகள், கொள்வனவு செய்தல் மற்றும் பரிமாற்ற சேவைகள் போன்றவையாக சபைக்குக் கிடைக்கப்பெற்ற கூட்டுமொத்தமான ரூபா 113,791,583 ஆன கொள்வனவு பெறுமதி மாத்திரம் நிதிக் கூற்றுக்களில் புத்தக இருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் நிறுவனத்தின் பிரதான நோக்கத்தின் பிரகாரம் புத்தகங்களை வகைப்படுத்துதல், புத்தகங்களை இனங்காணல் அல்லது பெறுமதியை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காத புத்தகங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு ஈடுபடுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கை மற்றும் தேசிய மரபுரிமையாக வகைப்படுத்தப்பட்டுள்ள புத்தகங்கள் தொடர்பான கொள்கை என்பன நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 சனவரி மாதம் முதல் எதிர்காலத்தில் தேசிய வைப்புக்களில் சேருகின்ற சகல வெளியீடுகளும் பெறுமதியிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கும் மற்றும் தேசிய நூலகத்தின் கூட்டுப்பெறுமதியை இனங்காணலின் கீழ் 2022 ஒக்டோபர் மாதத்திலிருந்து தேசிய ரீதியில் கைப்பற்றப்படுகின்ற விலை குறிப்பிடப்படாத வெளியீடுகளின் விலை தீர்மானித்தலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. | சகல ஆவணமாக்கல் வளங்களையும் உரிய பிரகாரம் வகைப்படுத்தி பெறுமதிகளை இனங்காணல், கணக்கீடு செய்தல் மற்றும் வெளிப்படுத்துவதற்கு உரிய கொள்கை தயாரித்தல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது திறைசேரியில் இருந்து கிடைத்த ரூபா 2,119,000 மூலதன மானியம் தொடர்பாகவும் மற்றும் வெளிநாட்டு மானியம் ரூபா 1,079,000 தொடர்பாகவும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் | இந்தப் பெறுமதியில் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சரியாக இனங்கண்டு நிதிக் கூற்றுக்களில் கணக்கீடு செய்தல் மற்றும் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டிய | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காண்பதற்கும் அளவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீராக்கங்கள் காணப்படுமாயின் எதிர்வரும் கணக்கீட்டு ஆண்டுகளில் மெற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 895,000 செலவில் பெறப்பட்டிருந்த உள்ளக தேசிய நியம புத்தக இலக்கம் விநியோகித்தல் கணனி மென்பொருள் முறைமை (ISBN) பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 20 இன் 26 ஆம் பிரிவின் பிரகாரம் கற்பனைச் சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த கணனி மென்பொருள் (ISBN) முறைமை தற்போது கணனி மற்றும் கணனி துணைப் பாகங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையால் எதிர்காலத்தில் கற்பனைச் சொத்து என்ற வகைப்படுத்தலின் கீழ் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைமைக்கு உரித்தான பேடன் அனுமதிப் பத்திரம் 2023 மே 09 ஆம் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கும் போது மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் 2023 நவம்பர் 24 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கும் போது ஐந்தொகைத் திகதியின் பின்னர் இடம் பெற்றதாக இந்த பேடன் அனுமதிப்பத்திரம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 6 இன் 11(ஆ) இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது பூச்சிகளை கட்டுப்படுத்தும் முறைமை தொடர்பான உரித்து பேடன் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக சபையினால் 2021.05.18 ஆந் திகதி கோரப்பட்டிருந்தது. அதனால் இது சொத்து ஒன்றாக 2021 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்தல், கணக்கீட்டு நியமம் 20 இன் பிரகாரம் மேற்கொள்ள முடியாதிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சபையின் அலுவலக கட்டிடம் அமைந்துள்ள காணி நன்கொடையாக 2021 திசெம்பர் 06 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 1995 ஆம் ஆண்டில் அந்த காணியில் ரூபா 254,400,000 ஆன மதிப்பீட்டுப் பெறுமதியேனும் | அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் திணைக்களத்தால் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி 2023.08.15 ஆந் திகதியே வழங்கப்பட்டிருந்தது. அந்தப் பெறுமதி ரூபா 6,392,100,000 ஆகும். அதன் பிரகாரம் அப்பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் | 2021 திசெம்பர் 06 ஆந் திகதி காணியின் உரித்து கிடைக்கப் பெற்றமையால் அது வரையில் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியைக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீடு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 219,763 ஆன சேமிப்பு வங்கிக் கணக்கு மீதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வங்கி பாஸ் புத்தகம் அல்லது மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வுத் திகதி வரையிலும் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்ட இந்த கணக்குத் தொடர்பாக மீதி உறுதிப்படுத்தல் வங்கியில் இருந்து கோரப்பட்ட போதும் இதுவரையில் கிடைக்கப்பெறவில்லை. அது கிடைத்தவுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதி உறுதிப்படுத்தலை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் சபையின் விற்பனைக் கடைகளில் ரூபா 264,303 ஆன 1,714 புத்தகங்களும், ரூபா 452,972 ஆன சபையின் வெளியீடுகள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத சபையின் வெளியீடுகள் 10,746 உம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படாத சபையின் வெளியீடுகள் யாவும் எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டின் இறுதி இருப்பு மீதியை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | இலவச உரித்துறுதியின் மூலம் 2019 யூலை 19 ஆம் திகதி சபைக்கு கையளிக்கப்பட்ட பண்டாரகமவில் அமைந்துள்ள 12 பேர்ச் காணி மற்றும் இரண்டு மாடிகளை உடைய தளபாடங்களுடன் உள்ள வீடு என்பன 2021 மே 18 ஆந் திகதி ரூபா 11,406,800 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் ரூபா 2,000,000 மாத்திரம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் அதில் உள்ளடங்கியிருந்த தளபாடப் பொருட்கள் மற்றும் ரூபா 183,817 பெறுமதியான நூலகப் புத்தகங்களின் | இதற்கான சட்டரீதியான உரிமைத் தன்மை சபைக்கு காணப்படாதிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாமல் இருந்ததுடன் 2021 இன் நிதிக் கூற்றுக்களில் இது தொடர்பான குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியை சரியாக வெளிப்படுத்துதல் மற்றும் தளபாடப் பொருட்கள், புத்தக இருப்புக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருப்பும் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை | | |
| (ஏ) | 2015 ஆம் ஆண்டு முதல் சபையில் ஆவண வளங்களை அட்டவணைப்படுத்தும் நூலக முகாமைத்துவ தகவல் முறைமை (KOHA) தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதன் உரிமைத் தன்மை சபைக்கு உரித்தற்றதாகும். சபையினால் அந்த முறைமை நூலகத் தகவல்களை களஞ்சியப்படுத்தும் வசதிக்காக மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றமையால் சபையின் சொத்து ஒன்றாக கணக்கீடு செய்தல் பிரச்சினையாக இருந்தது. | நூலக முகாமைத்துவ தகவல் முறைமை (KOHA) தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| இருப்புப் பெறுமதி | 113,791,583 | 43,135,921 | 70,655,662 | கொள்வனவு செய்யப்பட்டிருந்த புத்தகங்களின் இருப்பின் கிரயம் சரியாக இருந்ததுடன் இலவச வெளியீடுகளும் (Free of charge) எதிர் காலத்தில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளை இனங்கண்டு சரி செய்தல் வேண்டும். |
| விற்பனை மற்றும் விநியோக புத்தக இருப்பு | 3,123,568 | 3,239,548 | 115,979 | விற்பனை மற்றும் விநியோக புத்தக இருப்பாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட ரூபா 3,239,548 பெறுமதி சரியானதாகும். இருப்பு மெய்மையாய்வின் போது ஏற்பட்டிருந்த வழுவின் | வருடாந்த இருப்பு மெய்மையாய்வு நடவடிக்கைகளை சரியாக மேற்கொள்வதற்கும், அந்த அறிக்கையை நிதிக் கூற்றுக்களுடன் ஒப்பீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காரணமாக ரூபா 115,979 வேறுபாடு காண்பிக்கப்பட்ட போதிலும் அதன் மூலம் நிதி அறிக்கைகளில் எந்த ஒரு தாக்கமும் ஏற்படவில்லை. | |

**1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய இலக்கம் SC&PMU/Grant/20 வெளிநாட்டு வளங்கள் திணைக்கள சுற்றறிக்கை | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அனுபவம் மற்றும் இணக்கப்பாடு இன்றி 2020 ஆம் ஆண்டில் இருந்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 02 செயற்திட்டங்களுக்கு உரிய ரூபா 15,689,163 (USD 82,500) ஆன வெளிநாட்டு மானியத்தை பெற்றுக் கொள்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டத்திற்காக ரூபா 2,117,953 தொகை பெறப்பட்டிருந்தது. | இதன் பின்னர் இவ்வாறான செயற்திட்டங்களை மேற்கொள்ளும் போது கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட பிரகாரம் கல்வி அமைச்சிற்கு அறிவித்து அதன் பிரகாரம் நிதி ஏற்பாட்டை ஒதுக்கிக் கொள்வதற்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 20,774,680 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 11,963,702 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,810,978 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் அரசாங்கத்தின் மீண்டெழும் மானியம் ரூபா 17,895,000 இனால் குறைவடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது சபைக்கு கிடைக்கப் பெற்ற அரசாங்கத்தின் மூலதன மானியம் ரூபா 5,581,000 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | மூலதன மானியத்தை ஆக்க பூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |